வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 54/2022

வழக்கு சாட்சி PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சௌந்தர்ராஜ் | ஜாதி | |
| கணவர்/தந்தை | அப்பாண்டை | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 53 |

தேதி 18.10.2024

1,2 எதிரிகள் ஆஜர் இல்லை. 4வது எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை

நான் புழ்ல் காவாங்கரையில் 20 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். நான் அமாலிவிதமேஷன் கம்பெனியில் மிஷன் ஆப்ரேட்டராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 எனக்கு தெரியும். சர்வலிங்கம் என்னுடன் மிஷன் ஆப்ரேட்டராக கடந்த 30 ஆண்டுகளாக வேலை பார்த்து வருகிறார். சர்வலிங்கம், குணசேகரன், ராணியிடம் ஏலச்சீட்டு கட்டி வந்தார். ரொம்ப நாளாக கட்டி வருகிறார். எந்த வருடம் என்று எனக்கு தெரியவில்லை. குணசேகரன், ராணி ஏலச்சீட்டு பணத்தினை கொடுக்கவில்லை என என்னிடம் சர்வலிங்கம் கூறினார். குணசேகரம் குடியிருந்த வீட்டை காலி செய்து விட்டு சென்றுவிட்டதாக சர்வலிங்கம் கூறினார். போனில் சர்வலிங்கம், குணசேகரனிடம் சீட்டு பணத்தினை கேட்டபோது மிரட்டியதாக கூறினார். வழியில் வந்துகொண்டிருந்தபோது குணசேகரன், சர்வலிங்கத்தை மிரட்டியதாக கூறினார். போலீசார் என்னை சர்வலிங்கம் கொடுத்த மாதவரம் காவல் நிலைய புகாரில் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என கூறியதால் குறுக்கு விசாரணையானது முடிக்கப்பட்டது.